நாம் விலையை அதிகப்படுத்தி இருக்கிறோம். இதுவும் போதாது இன்னும் அதிகப்படுத்தலாம் என்று ஒப்பந்தத்திலே போட்டிருக்கிறோம். எவ்வப்பொழுது அதிகக் கட்டணம் வசூலிக்க முடியும் என்று தென்படுகிறதோ அவ்வப்பொழுதெல்லாம் விலையை உயர்த்துவதற்கு அந்த ஒப்பந்தத்திலே அதிகாரம் எடுத்திருக்கிறோம்.

தென் சென்னை மின் வழங்கு நிறுவனம்

* 37 வின.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியிலுள்ள தென் மதராஸ் மின்சாரக் கார்ப்பரேஷனை அரசே எடுத்து நடத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது செயலாக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) இந்த ஆண்டிற்குள் எடுக்கப்படும்.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, இந்த நிறுவனம் நாட்டுடைமையாக்கப்படும் என்ற எண்ணம் ஏற்பட்ட காரணத்தினால், அது செய்ய வேண்டிய பணிகளை எல்லாம், முக்கியமான பணிகளைக் கூட தாமதப்படுத்தி வருகிறது என்பது அரசுக்குத் தெரியுமா ? அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதற்குத்தான் இந்த ஆண்டு அரசுடைமையாக்கப்படும் என்று கூறினேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி : தலைவர் அவர்களே, எல்லா கம்பெனிகளும் அரசுடைமையாக்கப்படுமா, அல்லது இந்த ஒரு கம்பெனி மட்டும்தான் அரசுடைமையாக்கப்படுமா ? எல்லாக் கம்பெனிகளையும் அரசுடைமையாக்க எவ்வளவு நாள் ஆகும் என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, எல்லா கம்பெனிகளும் இந்த ஆண்டு அரசுடைமையாக்கப்படும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, தெற்கேயுள்ள தஞ்சாவூர் திருச்சி மற்றுமுள்ள ஜில்லாக்களிலே தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னுடைய அலுவலகங்களை வைத்திருக்கிற காரணத்தினால்,

1973 பிப்ரவரி 6]

நீண்டகாலமாகவே இங்கே சட்டமன்றத்திலே, பல சட்ட மன்ற உறுப்பினர்கள் விரைவாக அந்த கம்பெனிகளை எடுத்துக்கொள்ள வேண்டும், அரசு இலாகாவின் மூலமாக, மின்சாரம் வழங்கவேண்டு மென்று கூறியும், ஏன் அதிகமான காலதாமதத்தை அரசாங்கம் அனுமதித்துக்கொண்டிருக்கிறது ? கூடிய விரைவிலே எல்லா கம்பெனிகளையும் எடுக்கக்கூடிய முறையில் ஒரு காலகட்டத்தை நம்முடைய அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன் : தலைவர் அவர்களே, அந்த காலகட்டம்தான் இந்த ஆண்டு முடிவதற்குள்ளாக என்று சொல்லி யிருக்கிறேன்.

Hit and Run accidents

* 38 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the ' Hit and Run ' accidents have been on the increase in Madras City in 1971;

(*b*) if so, the details thereof; and

(*c*) the action taken to prevent such accidents?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) சென்னை மாநகரில் 1—1—1971 நாளிலிருந்து 31—12—1971 வரையில் " மோதி விட்டு ஓடிவிடும் " வண்டிகளினுல் மொத்தம் 623 விபத்துக்கள் ஏற்பட்டன. கடந்த ஆண்டில் இதே கால அளவில் 31—12—1970 வரையில் 453 விபத்துக்களே ஏற்பட்டன.

(உ) " மோதிவிட்டு ஓடிவிடும் " வண்டிகளால் ஏற்படும் விபத்துக்களைத் தடுக்க, குறிப்பாக நெருக்கடி நேரங்களில் முறையான சுற்றுக்காவல் பணிபுரிகின்றனர்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, "மோதிவிட்டு ஓடிவிடும் வண்டிகள்" சாதாரண கார்களா ? அல்லது அரசாங்க பஸ்களா ? அப்படி ஓடிவிட்டால் அவர்களை பிடிப்பதே கிடையாதா? அவர்களுடைய நிலை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கு வார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மோதிவிட்டு யார் ஓடினுலும் அவர்களைப் பிடிப்பதற்கு எப்பொழுதும் அரசாங்கம்